**செ. கு. எண்: 216** **நாள்:03.10.2020**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**</u>

<u>அவர்களின் அறிக்கை – **3.10.2020**</u>

**தேனி மாவட்டம்,** பெரியாறு அணையிலிருந்து **18**ம் கால்வாயில் (பழனிவேல் ராஜன் கால்வாய்) தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடி மக்களின் கோரிக்கையினை ஏற்று, தேனி மாவட்டம், **18**ம் கால்வாயின் (பழனிவேல் ராஜன் கால்வாய்) கீழ் உள்ள **4614.25** ஏக்கர் ஒருபோக பாசன நிலங்களுக்கு பெரியாறு அணையிலிருந்து **7.10.2020 முதல் 30 நாட்களுக்கு,** விநாடிக்கு **98** கனஅடி வீதம், மொத்தம் **255 மி.கன அடி** தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், தேனி மாவட்டம், **18**ம் கால்வாயின் (பழனிவேல் ராஜன் கால்வாய்) கீழ் உள்ள **4614.25 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**